உடனடியாகக் கவனித்து முதல் நிலை நகரசபை என்று அறிவிக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகளை முதல் நிலை, இரண்டாம் நிலை என்றாக்குவது என்று சொன்னாலும், புதிய நகராட்சி என்று அறிவிக்க வேண்டுமென்று சொன்னாலும், மைய அரசின் மூலமாக ஒரு தடை உத்தரவு இருக்கிறது. இதற்குக் காரணம் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடந்துகொண்டிருக்கிற காரணத்தால் இவைகள் எல்லாம் 1981-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் தேதி வரையிலும் செய்யக் கூடாது என்று உத்தரவு இருக்கிற காரணத்தால் இவை நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. த. இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பிரசித்தி பெற்ற நகரியமாக இராமேஸ்வரம் இயங்கி வருகிறது. இந்த இராமேஸ்வரம் நகரியத்தை நகரசபையாக மாற்றுவதற்கு அரசிடம் திட்டம் ஏதும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி பரமக்குடி பற்றியது.

தாராபுரம் பாசன வாய்க்காலில் கலக்கும் கழிவுப்பொருள்கள்.

*வினா எண் 384—திரு. கு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாராபுரம் நகரத்தின் மத்தியில் சென்று கொண்டிருக்கும் பாசன வாய்க்காலில் நகரத்தின் வீதிகளிலிருந்து கழிவுநீர், கழிவுப்பொருள்கள் தாராளமாகப் போய் கலந்து தண்ணீரை கெடுத்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) நகர மக்கள் அந்த வாய்க்கால் தண்ணீரை குடிக்கவும், குளிக்கவும் பயன்படுத்துவதால் தொத்து நோய்கள் பரவும் அபாயமுள்ளதை அரசு கவனித்துள்ளதா?

(இ) இவைகளைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) தாராபுரம் நகரின மத்தியில் செலலும் வாய்க்கால் தண்ணீரை அருகிலுள்ள குடிசைவாழ் மக்கள் குடிக்கவும், குளிக்கவும் பயன்படுத்துவதில்லை. துணிகளை துவைப்பதற்கு மட்டுமே பயன்படுத்துகிறார்கள்.

1981 மார்ச் 5]

(இ) நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தும்போது இக்கழிவுநீர் வாய்க்காலில் கலப்பது தவிர்க்கப்படும்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் அந்த வாய்க்காலின் கரையிலே குடியிருப்பது மட்டுமல்ல. நகரத்தினுடைய நடுமையத்திலே அந்த வாய்க்கால், சென்று கொண்டிருக்கிறது. இதில் பல வீடுகளிலிருந்தும் கழிவுப்பொருள்களும், கழிவுநீரும் அத்தனையும் இந்த வாய்க்காலில் கலக்கிறது. இந்த இடத்தில் குளிப்பது கூட உண்டு; அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்த்தாலே தெரியும், குளிக்கிறார்கள் அங்கே, இப்படிப்பட்ட நிலைமையில் கழிவுப்பொருள்கள் அங்கே போய் சேராமல் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தாராபுரம் எனக்கு புதிய இடமில்லை; என்னுடைய தொகுதிக்கு பக்கத்திலேதான் இருக்கிறது. அடிக்கடி சென்று வரக்கூடிய ஒரு இடம்: எனக்கு நன்றாகத் தெரிந்த இடமும்கூட; ஆகவே, இந்த பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றினால் இந்த நிலைமைகள் எல்லாம் சீர்படுத்தப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாராபுரம் வாய்க்காலில் சாக்கடை கலப்பதைத் தடுக்க சீர் செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதுவரையிலும் குறைந்தபட்சம் குளிக்கவோ, தண்ணீர் எடுக்கவோ அங்கு தடை விதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் போன்ற உத்தேசம் இல்லை. சுத்தமாக இருப்பது சுகம் என்பது முதியோர்கள் கூறிய பழமொழி.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, பாதாளச் சாக்கடை வந்த பிறகு தாராபுரம் வாய்க்காலில் சாக்கடைகள் கலப்பது தடுத்து நிறுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசாங்கம் வேகமாக நடவடிக்கைகள் எடுத்து, சாக்கடை கலப்பதைத் தடுப்பதற்கு என்ன திட்டம் வைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கடி மக்களுக்கு அறிவுறுத்துவதன் மூலமாக சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்கிற அறிவுறுத்தல்கள்

மட்டுமே இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது. அதை எவ்வளவு சீக்கிரமாக சீரமைக்கச் செய்ய வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் செய்யப்படும்.

[முற்பகல் 9–20]

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படுகிற போது இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கூடிய சீக்கிரத்தில்.

செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம்.

* வினா எண். 385— திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யார் தொகுதியில் உள்ள கொருக்காத்தூர் என்ற ஊருக்கும் ஆற்காடு தொகுதியில் உள்ள வாழைப் பந்தல் என்ற ஊருக்கும் இடையே ஓடும் செய்யாற்றில் மேம்பாலம் கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்பொழுது துவங்கப் பெறும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, கொருக்காத்தூர், வாழைப்பந்தலுக்கு இடையிலே உள்ள பாலத்திற்கு மதிப்பீட்டுத் தொகை சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னாலே மதிப்பிடப்பட்டு ஏதோ ஒரு காரணத்தாலே நிறுத்தப் பட்டதாக அறிகிறேன். அந்தத் தகவல் அரசாங்கத்திற்கு அல்லது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : செய்யாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டத்திற்கு 10 லட்சம் ரூபாய் மதிப்பீடு செய்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பணி அரசின் அங்கீகாரம் பெற்ற எந்தத் திட்டதிலேயும் இடம்

சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS